**24.01.2020**

**பத்திரிக்கை செய்தி**

**விமான நிலையம் மற்றும் வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயிலில் இசை நிகழ்ச்சி நடைபெற்றது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று (24.01.2020) விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையத்தில் 'சென்னை கலைத் தெரு விழா' பல்சுவை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது.

காலை 10:00 மணிக்கு ஒயிலாட்டம் - விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையம் பொதுத்தளத்திலும், ஒத்தசெவுரு - தமிழ் ராக் பேண்ட் மற்றும் சோலோ தியேட்டர் சுனந்தா, பரத் நாராயண் குழுவினரின் கர்நாடக இசை நிகழ்ச்சி (மெட்ரோ இரயிலில் விமான நிலைய மெட்ரோ முதல் வண்ணாரப்பேட்டை மெட்ரோ வரை) மற்றும் காலை 11:30 மணிக்கு வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் தேவராட்டம் மற்றும் தப்பாட்டம் (தெரு நிகழ்ச்சி) நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.